## மக்களின் தேவையும் வசதியும் முதன்மை நோக்கு

# 'வாரிசான் கோலாலம்பூர்' திட்டம் விரைவில் செயல்பட வேண்டும்

### -பிரதமர் அன்வார் வலியுறுத்தல்

● ராமேஸ்வரி ராஜா

கோலாலம்பூர், ஏப். 26-
மலேசியா மடானியின் தலைநகர் பாரம்பரியத்தை மேம்படுத்தும் 'Warisan KL: Warisan Ibu Kota Malaysia Madani' என்ற திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரவேண்டும் என பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் வலியுறுத்தினார்.
இந்த திட்டம் கோலாலம்பூரின் நவீன நகரமயமாக்கலை இலக்காகக் கொண்டாலும், அதில் மக்களின் தேவைகள், பாரம்பரியப் பொருள், கலாச்சார மதிப்பீடுகள் புறக்கணிக்கப்படக்கூடாது என்று நேற்று கோலாலம்பூர் மாநகர் மன்ற உள் அரங்கில் நடைபெற்ற இந்த திட்டத்தின் தொடக்க விழாவின்போது அவர் கூறினார்.
நவீன, உயர்நுட்பமான திட்டங்கள் தேவையானவை. ஆனால் அவை நிலத்துடன் இணைந்தவை ஆக வேண்டும். பாரம்பரியம், பண்பாடு, மக்களின் வசதி இவை அனைத்தும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பெரும்பான்மை மக்களுக்கு நன்மை தரும் வகையில் திட்டமிடல் அவசியம் என்றார் பிரதமர்.
பசுமைத் தளங்கள், மக்கள் நடக்க, சைக்கிள் ஓட்ட வசதிகள், பாதுகாப்பு, நகர அழகு ஆகியவை அனைத்தும் இந்த திட்டத்தின் முக்கிய அம்சங்களாக இருக்க வேண்டும் என்றும் இது தனி ஒரு பிரிவினருக்காக அல்ல,



அனைத்து மக்களுக்கும் பயன்படக்கூடியதாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.இந்த விழாவில் கூட்டரசு பிரதேச அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஸலிஹா முஸ்தாபா, அரசாங்கத்தின் தலைமைச் செயலாளர் டான்ஸ்ரீ ஷம்சுல் அஸ்ரி அபு பக்கார், கோலாலம்பூர் மேயர் டத்தோஸ்ரீ டாக்டர் மைமூனா முகமது ஷரிஃப் ஆகியோர் கலந்துகொண்டனர்.